
அல்–குர்ஆனை வாசித்தல் 01




# மகாசித் ஆய்வு முறைமை

## இஸ்லாமிய ஆய்வு முறைமைக்கான சமகால மீள்வழிவமைப்பு நோக்கி...

wordsofmercy

தொகுப்பு
ரிஷாட் நஜிமுடீன்

# மகாசித் ஆய்வு முறைமை

## இஸ்லாமிய ஆய்வு முறைமைக்கான சமகால மீள்வடிவமைப்பு நோக்கி

ஜாஸிர் அவ்தா மகாசித் சிந்தனையை வலியுறுதிதிப் பேசும் நவீனகால முஸ்லிம் அறிஞர்களுள் முக்கியமானவர். மகாசிதுஷ் ஷரீஆ பற்றிய அவரது புத்தகங்களுக்கு தனியான இடம் உள்ளது. எனினும், ஏற்கனவே எழுதிய புத்தகங்களை விட இன்று அறிமுகப்படுத்த முனையும் புத்தகம் இன்னும் விரிவான தளம் ஒன்றை நோக்கி நகர்ந்திருக்கிறது. சுருக்கமாகக் கூறுவதாக இருந்தால், ஏற்கனவே எழுதப்பட்ட புத்தகங்கள் மிகப் பெரும்பாலும் இஸ்லாத்தின் கிளையம்சங்களை மகாசிதோடு தொடர்புபடுத்துவதாக உள்ள மாற்றமாக, இப்புத்தகம் மகாசிதை ”முஸ்லிம் சமூகத்தின் முழுமையானதொரு உள்ளக சீர்திருத்தம்” ஒன்றுக்கான அடித்தளமாக அறிமுகப்படுத்துகிறது. அதே நேரம், குறிப்பிட்ட சீர்திருத்தம் ஒட்டுமொத்த மனித சமூகத்துக்குமான சீர்திருத்தமாகவும் பங்களிப்பாகவும் அமையும் என்பதும் அவரது நம்பிக்கை.

பேராசிரியர் ஜாசிர் அவ்தாவுடைய “Re-envisioning Islamic Scholarship- Maqasid methodology as a new approach” எனும் புத்தகம் (அரபுமொழியில் இதன் தலைப்பு للإجتهاد الإسلامي المنهجية المقاصدية نحو إعادة صياغة معاصرة என்றமைகிறது) முன்னுரையுடன் ஆரம்பித்து, அறிமுகக் குறிப்பு, நவீன இஜ்திஹாத் முறைமைகளது சிக்கல்கள், மகாசித் ஆய்வுமுறைமைக்கான அடிப்படைகள், இஜ்திஹாதுக்குரிய ஐந்து எட்டுக்கள், கோட்பாட்டுருவாக்கத்துக்கான ஏழு அம்சங்கள்,

அவற்றைக் காணும் முறைமைகள், இஸ்லாமிய கற்கைகளுக்கான பரிந்துரைக்கப்படும் ஒழுங்கு ஆகிய ஆறு பிரதான தலைப்புக்களை உள்ளடக்கியிருக்கிறது.

புத்தகத்தின் கருத்துக்களை இக்கட்டுரை சுருக்கித் தருகிறது. நவீன இஸ்லாமிய சிந்தனையில், மகாசித் சிந்தனையில், சமூக சீர்திருத்த முறைமையில் புதிய ஒளியை பாய்ச்சும் இப்புத்தகம் மிக விரிந்த தளத்தில் வாசிக்கப்பட வேண்டும், கலந்துரையாடப்பட வேண்டும் என்பதே எமது அவா.

# முன்னுரை

இஸ்லாமிய வரலாறு ஏற்ற, இறக்கம் கொண்டது, காலத்துக்குக் காலம் அறிஞர்கள் தோன்றி சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர் என்ற வரலாற்று உண்மையை ஆழமாக புரிந்துகொள்வது அவசியம். "சத்தியம், அசத்தியம் ஒன்றோடொன்று முரன்பட்டுக் கொள்ளல்" எனும் இறைநியதி வரலாறு முழுக்க தொழிற்பட்டே வந்திருக்கிறது. பரம்பரை ஆட்சி முறைமை, அடக்குமுறை ஆட்சிமுறைமை, ஆட்சியாளர்களுக்கு பக்கபலமாக இருக்கும் சட்டத்துறை அறிஞர்கள் போன்ற சறுக்கல்கள் வந்த போது உமர் இப்னு அப்துல் அஸீஸ் போன்றவர்கள் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டனர். பிற்பட்ட காலத்தில் பைதுல் ஹிக்மா மொழிபெயர்ப்பு பணியினூடாக நல்ல பல ஆரோக்கியமான முன்னெடுப்புக்கள் நடந்தது போல, அதனூடாக இஸ்லாமிய சிந்தனைக்கு முரண்பட்ட வெளி சிந்தனைகளும் ஊடுருவத் தொடங்கின. எனினும், அக்கால முஸ்லிம் அறிஞர்கள் தத்துவ ரீதியாக சவால்களை எதிர்கொண்டு வஹியின் ஒளியில் சிந்தனைகளை அணுகும் ஆய்வு முறைமையை கட்டமைத்தனர்.

இவ்வரலாற்றுத் தொடர்ச்சியில் இன்றைய உலகை புரிந்து கொள்வது அவசியம். இன்றைய தேசிய அரசு முறைமைக்குள் இஸ்லாமிய சிந்தனை பல வகையான சிக்கல்களை எதிர்கொள்கிறது. உதாரணமாக, இஸ்லாமிய சட்டத்துறை அரச மயமாக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடலாம். நவீனத்துவத்துக்கு முன்னரான காலப்பகுதியில் இஸ்லாமிய சட்டப்பகுதி சுயாதீனமான நிறுவன ஒழுங்கில், அரச தலையீடு இல்லாத ஒன்றாக இயங்கி வந்திருக்கிறது. ஸகாத், வக்ப் போன்றன சுயாதீனமாக இயங்குவதற்குத் துணை புரிந்தன.

ஆனால், இன்று பத்வா, வக்ப், ஸகாத், கற்பித்தல் நிலையங்கள் என அனைத்துமாக அரச கட்டுப்பாட்டின் கீழ் ஒரு சிலரது நலனை மையமாக வைத்து இயக்கப்படுவது மிக முக்கியதொரு சவாலாக உள்ளது.

இவ்வாறான பல சவால்களை இன்று முஸ்லிம் சமூகம் எதிர்கொள்கிறது. அவற்றுக்கான தீர்வு தேடும் முயற்சிகளும் நடந்தவாறே உள்ளன. எனினும், போதியதாக இல்லை. புதியதொரு சீர்திருத்த முறைமை தேவைப்படுகிறது. இஸ்லாம் பற்றிய முழுமையானதொரு பார்வையோடு அது வீரியம் கொண்டு எழ வேண்டியுள்ளது. அதன் ஆரம்ப எட்டையே இப்புத்தகம் எடுத்து வைக்கிறதுஎன நம்பலாம்.

## பகுதி 01: அறிமுகக் குறிப்பு

கருத்துக்கள், உலகப் படைப்புகள் மற்றும் உலக நிகழ்வுகள் ஒன்றோடொன்று இறுகப் பிணைந்திருக்கின்றன மற்றும் இலக்கு மையப்பட்டிருக்கின்றன என்ற இரு அடிப்படை உண்மைகளை அல்குர்ஆன் மிக விரிவாக விளக்குகிறது என்ற கருத்தை வலியுறுத்தும் விதமாக இப்பகுதி வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

அல்குர்ஆனை சிலர் துண்டுதுண்டாகப் புரிந்து கொள்கின்றனர், ஒன்றோடொன்றை இணைத்துப்பார்க்காமல். ஒரு சூரா இன்னொரு சூராவுடன் தொடர்புபடுகிறது. ஓர் ஆயத் இன்னோர் ஆயத்துடன் தொடர்புபடுகிறது. கிளைப்பகுதிகள் தலையாய பகுதிகளோடு இணைகிறது. இவ்வகையாக ஒன்றை இன்னொன்றோடு இணைத்துப் பார்த்தல் அவசியமானது. தேனி பற்றிய வசனம் தேனியை வர்ணிப்பதுடன் நின்று விடுவதில்லை. அது விரிந்ததொரு தளம் நோக்கி எம்மை திசைவழிப்படுத்துகிறது. அதன் படைப்பாளன் பற்றி ஞாபகப்படுத்துகிறது. அது வாழும் சூழல் பற்றியும் அதன் மூலம் பயனடையும் மனிதர்கள் பற்றியும் கூறுகிறது. தேனி பற்றிய ஒட்டுமொத்தப்பார்வை ”சூழல் கட்டமைப்பு” ஒன்றை விளக்குகிறது.

கிளைத் தலைப்புக்களை ஒன்றோடொன்று இணைத்துப் பார்க்கும் போது தலையாய கருத்தாக்கங்கள் பிறக்கின்றன (Emergence of wholism). இங்கு கிளைத்தலைப்புக்களை ஆய்வுக்குட்படுத்தி அவற்றுக்கிடையில் பிணைப்பு உருவாக்கப்படும் போது அவை ஒவ்வொன்றும் அடைய முனையும் இலக்குகளை கருத்திற் கொள்வது அவசியம். ஏனெனில், அல்குர்ஆன், அதன் போதனைகள் இலக்குமையப்பட்டவையாகவே உள்ளன.

தொழுகையை எடுத்துக் கொள்வோம். “சலாத” (தொழுகைக்கு அல்குர்ஆன் பயன்படுத்தும் சொல்) என்பது “சிலத” (சிலத் என்பது இறுக்கமான தொடர்பு, பிணைப்பை குறிக்கிறது) என்ற பதத்திலிருந்து பிறக்கிறது. தொழுகை இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் ஒரு பிணைப்பை உருவாக்குவதை இலக்காக கொள்கிறது, மனிதனுக்கும் மஸ்ஜிதுக்குமிடையில் ஓர் இணைப்பை ஏற்படுத்த முனைகிறது, அடுத்த மனிதர்களோடு தொடர்புபட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது, மலக்குமார்கள் ஏனைய படைப்பினங்களோடு தொடர்புபடுவதை நோக்காகக் கொள்கிறது... என பல பரிமாணங்களை தொழுகை இலக்காகக் கொள்கிறது. தொழுகை மனிதனது அறிவையும், உணர்வையும் அடிக்கடி தட்டிவிடுகிறது, அவனது நடத்தை சீராகுவதை யாசிக்கிறது போன்றன தொழுகையின் இன்னும் சில எதிர்பார்ப்புக்கள்.

மேற்கூறிய வகையில், அல்குர்ஆனின் ஒவ்வொரு கருத்தையும் இன்னொன்றோடு இணைத்துப் பார்த்து, ஒவ்வொன்றும் அடைய விரும்பும் இலக்குகளை கருத்திற்கொள்ளும் போது “தலையாய கருத்தாக்கங்கள” பிறக்கின்றன. அவற்றை நாம் ஏழு என அடையாளப்படுத்துகிறோம்: இலக்குகள் (Objectives), எண்ணக்கருக்கள் (Concepts), குழுக்கள் (Groups) பிரபஞ்ச விதிகள் (Universal laws) பெறுமானங்கள் (Values) ஆதாரங்கள் (Proofs) ஏவல்கள் (Commands). இவ்வகையான தலையாய கருத்தாக்கங்கள் புதியதொரு உலகப் பார்வை (Worldview) தோற்றம் பெறுவதற்கு வழிவகுக்கின்றன.

அல்குர்ஆனை ஒன்றோடொன்று இறுகப் பிணைந்ததாகவும் இலக்குமையப்பட்டதாகவும் வாசிக்கும் அணுகுமுறை அனைத்தையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த பார்வையாகவும், எதிர்காலத்தை கருத்திற்கொண்ட திட்டமிடலாகவும், பலபோது முஸ்லிம் சிந்தனையை குறிப்பாகவும், அடுத்த சிந்தனைகளை பொதுவாகவும் விமர்சிக்கும் அணுகுமுறையாகவும் அமைகிறது. இதனை நாம் அடுத்துவரும் தலைப்புக்களில் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

## பகுதி 02: நவீன கால இஜ்திஹாத் முறைமைகளில் உள்ள சிக்கல்கள்

முஸ்லிம் அறிஞர்களது நவீன கால இஜ்திஹாத்கள் பின்வரும் நான்கு வகையான சிக்கல்களுக்குள் அள்ளுண்டு செல்வதை அவதானிக்கலாம்:

01– வஹியின் பக்கம் மீளாமல் முதுசங்களை கண்மூடி பின்பற்றல்:

முதுசங்களுக்கு புனிதத்துவத்தை வழங்கும் அளவுக்கு கண்மூடி பின்பற்றல் வளர்ந்திருக்கிறது. இங்கு வஹி முழுமையாக புறக்கணிக்கப்படுகிறது. நாம் முதுசங்களில் இருந்து பயனடைவதை மறுக்கவில்லை. எமது முதுசம் பிரசவித்திருக்கும் அனைத்து வகையான சிந்தனைப் பள்ளிகளிலிருந்தும் பயனடைவதை விரும்புகிறோம். ஆனால், அவை ஒவ்வொன்றையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டு ஆய்ந்து உரையாடலுக்கு உடப்படுத்துவதே பொருத்தமானது, ஒருபோதும் அவற்றை தீர்மானிக்கும் மூலாதாரங்களாக ஆக்கி விடக்கூடாது. அவற்றை ஒப்பிட்டு ஆயும்போது வஹியின் ஒளியில் நின்றே அவற்றை அணுக வேண்டும். வஹியின் கருத்தே தீர்மாணிக்கும் கருத்தாக இருக்கும். பதிலாக, அது முதுசத்தை பின்தொடரும் துணை மூலாதாரமாக மாறிவிடக்கூடாது.

2- விமர்சனங்கள் இன்றி உலக ஒழுங்கை நியாயம் கண்டு ஏற்றல்:

நவீனத்துவம் தோற்றுவித்திருக்கும் சிந்தனைகள், கோட்பாடுகளை விமர்சன சிந்தனையுடன் அணுகுவதற்குப் பதிலாக, நியாயம் கண்டு அவ்வொழுங்கை ஏற்கும் போக்கு எம்மிடம் மிகைப்பதை அவதானிக்கலாம். சிலர் மேற்கத்தய நவீனத்துவம் தோற்றுவித்திருக்கும் ஒழுங்கை விமர்சிக்கின்றனர். ஆனால், மிக மேலோட்டமாக. சில நடைமுறைகளை ஹராம், ஹலால் என பத்வா கூறி முடித்துக் கொள்கின்றனர். நடைமுறைக்குப் பின்னால் தொழிற்படும் தத்துவங்களை, கோட்பாடுகளை மறந்து விடுகின்றனர்.

உதாரணமாக, நவீன தேசிய அரசு எனும் கருத்தாக்கத்தில் நற்பிரஜைத்துவம் இஸ்லாத்தில் உள்ளது என்று கூறிக் கொண்டு தேசியம் எனும் பெயரில் அரங்கேரும் ஆக்கிரமிப்பு, அதிகார கட்டமைப்பு போன்றவற்றை இலகுவாக கடந்துவிடுகிறோம். மேற்கத்தய வட்டி வங்கி எனும் கலந்துரையாடலில் சலுகைகளைக் கூறுவதுடன் முற்றுப்புள்ளி வைக்கிறோம். வட்டி வங்கியின் பின்னால் தொழிட்படும் உயர் வர்க்கத்தினரின் பண சுரண்டல் பற்றி கரிசணை கொள்வதாக இல்லை. இங்கு நாம் கூறுவது, வட்டி வங்கியின் இயங்கும் ஒழுங்கை கேள்விக்குட்படுத்தும் உரையாடல்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே. இஸ்லாமிய நிறுவனங்கள் தனி நபருக்கான தீர்வுகளையே பெரும்பாலும் முன்வைக்கின்றன. நவீனத்துவம் தோற்றுவித்திருக்கும் நிறுவன ஒழுங்குகளை கேள்விக்குட்படுத்தும் சக்தியாக இஸ்லாம் இன்னும் முன்வைக்கப்படவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

3- அறிவின் மூலம் பற்றிய முரண்பாடு:

மேற்கின் சிந்தனை படையெடுப்பு காரணமாக அறிவு பற்றிய புரிதலில் மிகப் பெரும் கோளாறு இஸ்லாமிய சிந்தனைத் தளத்தில் தோன்றியது. அறிவை கூறுபோட்டுப் பார்த்தனர். மார்க்க அறிவு, உலக அறிவு அல்குர்ஆன், சுன்னா அறிவு, மனித அறிவு போன்ற பிரிப்புமுறைகள் தோன்றின. இருவகை அறிவுகளுக்குமிடையில் அறிவுப் பரிமாற்றம் (Knowledge sharing) நடைபெற வேண்டும், அதனூடாக சமூக மாற்றம் ஒன்று நோக்கி நகர வேண்டும் என சிலர் கூறுகின்றனர். இங்கிருக்கும் சிக்கல், ஒரு துறை சார்ந்தவர்கள் அடுத்த துறை சார்ந்தவர்களது அத்துறை சார்ந்த அடிப்படை எண்ணக்கருக்களையோ கலைச் சொற்களையோ புரிந்துகொள்ளக் கூடமுடியாதவர்களாக இருக்கிறார்கள்- என்பதுதான். இவ்வாறிருக்கும் போது அறிவுப் பரிமாற்றம் எந்தளவு தூரம் தாக்கம் மிக்கதாக இருக்கும் என்பது மிகப் பெரிய கேள்வி. இதற்கு மாற்றமாக, மகாசித் ஆய்வுமுறைமை இஸ்லாமிய அறிவு முறைமையை அதன் அடிப்படை மூலாதாரத்திலிருந்து பெற முனைகிறது. துறைகளை வஹியுடன் தொடர்புபடுத்த விரும்புகிறது. ஏழு தலையாய கருத்தாக்கங்களை வரைவதனூடாக துறைகளை இணைக்கலாம் என நம்புகிறது.

4- வஹி, கலாச்சாரம் இரண்டையும் பிரித்தறியாமல் கட்டுடைப்பு செய்ய முனைதல்:

பின்நவீனத்துவத்தின் தாக்கத்தால் தோன்றியிருக்கும் கட்டுடைப்பு சிந்தனைப் பள்ளி வஹியின் புனிதத்துவத்தையும் கட்டுடைக்க விரும்புகிறது. அதிகாரம் பற்றிய அதன் உரையாடலில் அதிகாரத்தின் மையத்தில் இறைவன், வஹி

கூட இருக்கக் கூடாது என்ற வாதத்தை முன்வைக்கிறது. சிலர் வஹியை கலாச்சார உற்பத்தி (Cultural product) என்கின்றனர். வஹியை இருப்பது போல வித்தியாசமான கலாச்சார சூழலுக்கு அமுலுக்கு கொண்டு வருவது சாத்தியமற்றது, விஞ்ஞானபூர்வமற்றது என்றெல்லாம் வாதாடுகின்றனர். நவீன இஸ்லாமிய சிந்தனை மேற்கூறிய சிக்கல்களுக்கும் மாட்டிக் கொண்டது போல, நவீன மகாசிதிய்ய சிந்தனையும் நியாயமான அளவு சிக்கிக் கொண்டுள்ளது எனலாம். மகாசிதிய ஆய்வுகள் வரலாற்று இமாம்களை மீட்டிக் கொண்டு இருக்கின்றன, அதனைத் தாண்டி பயணிக்கும் உத்வேகம் இன்னும் போதியளவு வரவில்லை எனலாம். மேற்கத்தைய ஒழுங்கை மகாசித் எனும் பெயரால் நியாயம் காணும்போக்கு கூட உள்ளது. செல்வத்தை பாதுகாத்தல் (ஹிப்லுல் மால்) எனும் மகாசிதின் அடிப்படை கருத்து மூலம் முதலாளித்துவ சுரண்டல் பொருளாதாரத்தின் எத்தனையோ கூறுகளை சரிகாணும் போக்கு கூட ஊடுருவியிருக்கின்றன. மகாசித் சிந்தனை பெரியதொரு சீர்திருத்தத்தை வேண்டி நிற்கின்றது என்பதையே இவை சுட்டிக் காட்டுகின்றன.

# பகுதி 03: மகாசித் ஆய்வு முறைமையின் அடிப்படைகள்

புத்தகத்தின் மையப்பகுதி இது. எமது ஆய்வுமுறைமை எவ்வாறு கட்டமைக்கப்படுகிறது என்பதை இப்பகுதி விளக்குகிறது. மகாசித் ஆய்வுமுறைமை பின்வரும் மூன்று அடித்தளங்கள் மீது கட்டியெழுப்பப்படுகிறது:

1– அறிவின் மூலம்:

அறிவின் மூலம் “வஹி” என்பதை ஆரம்பமாக வரையறுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. அறிவின் சொந்தக்காரன் அல்லாஹ், அவனே மனிதனுக்கு கற்பித்தான். கற்புலனாகும் விடயங்களையும், கற்புலனாகா விடயங்களையும் அறிபவன் அவன். அல்லாஹ்வுடைய அறிவு பூரணமானது. மனிதனது அறிவு குறைபாடுகள் கொண்டது. எனவே, வஹியின் ஒளியிலேயே நாம் ஏற்கனவே குறிப்பிட்டுக் காட்டிய ஏழு தலையாய கருத்தாக்கங்களையும் புரிந்துகொள்ள வேண்டும். இங்கு வஹியே அனைத்தையும் விட மேலாகிறது. அதுவே இலக்குகளையும் எண்ணக்கருக்களையும் குழுக்களையும் பிரபஞ்ச விதிகளையும் பெறுமானங்களையும் ஆதாரங்களையும் ஏவல்களையும் முன்வைக்கின்றது, வரைகின்றது. வஹியை புரிந்துகொள்ளும் போது “இலக்குமையவாசிப்பு” முக்கியத்துவமானது. அடைய விரும்பும் இலக்கு, காரண, காரியங்கள் என்பன இங்கு வாசகன் அவதானம் குவிக்க வேண்டிய பகுதிகளாக இருக்கின்றன.

வஹியிலிருந்து கோட்பாடுகளை உருவாக்கும் போது "அல்குர்ஆனிய அரபு மொழி" முதன்மை இடத்தை வகிக்கிறது. அல்குர்ஆன் தனித்துவமான மொழியைக் கொண்டுள்ளது. சாதாரண அரபு மொழியை விட்டும் வித்தியாசமானது. எனவேதான், அல்குர்ஆனிய அரபு மொழி என்கிறோம். அல்குர்ஆனிலிருந்தே அதன் மொழியைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இரு பிழையான சிந்தனைப் போக்குகள் இன்று ஆதிக்கம் பெற்று வருவதை அவதானிக்கலாம். ஒன்று, அறிவின் மூலம் இறைவன் என்பதற்குப் பதிலாக மனிதன், மனித அறிவு, பொருளாதாரம், தேசம் என வேறொன்றை முன் நிறுத்துதல் எனும் சிந்தனைப் போக்கு. அடுத்தது, அறிவின் மூலம் என எதுவும் இல்லை என மையநிலையில் எதனையும் முன்நிறுத்தாது அனைத்தையும் கட்டுடைக்கும் சிந்தனைப் போக்கு.

2- நடைமுறை உலகைப் புரிந்துகொள்ளல்:

சடரீதியான பகுதியுடன் சேர்த்து மானசீக பகுதியையும் புரிந்துகொள்வதனூடாகவே உலகு பற்றிய முழுமையான பார்வை தோன்றுகிறது. வஹியை விட்டும் நீங்கிய நிலையில் மனிதனால் கட்டமைக்கப்பட்டிருக்கும் சிந்தனைகள், கோட்பாடுகள், அணுகுமுறைகள், அளவீடுகளை விட்டும் ஆரம்பமாக மனித அறிவை நீக்கி சார்பியம் அற்ற நிலைக்கு அதனை கொண்டு வர வேண்டும். வஹியின் புரிதலிலிருந்து உலகு பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். அல்குர்ஆன் கூறும் மானிட சமூகத்துடன் தொடர்புபடும் இலக்குகள் மற்றும் முஸ்லிம் சமூகத்துடன் தொடர்புபடும் இலக்குகள்

நோக்கி உலகை நெறிப்படுத்தி வழிகாட்ட வேண்டிய புனர்நிர்மாணப்பணி ஒன்று தேவைப்படுகிறது.

மானிட சமூகத்துக்கான அல்குர்ஆனின் இலக்குகளை பின்வருமாறு கூறலாம்: இறைவனை வணங்குதல், உள்ளங்களை உயிர்ப்பித்தல், மனிதனை கண்ணியப்படுத்தல், நீதியை நிலைநாட்டல், பூமியை சீர்செய்தல். இவற்றுக்கு அப்பால் முஸ்லிம் சமூகத்துடன் தொடர்புபடும் இலக்குகளாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும்: மனிதர்களுக்கு சாட்சி பகரக்கூடியவர்களாக மாறுதல், இறை அத்தாட்சிகளை ஆழ்ந்து கற்றல், சமூக ஒற்றுமை, பலவீனர்களுக்கு உதவுதல், நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல்.

உலகம் பற்றிய மேற்கூறிய பார்வை நீண்ட திட்டமிடலை வேண்டிநிற்கிறது. எதிர்காலம், திட்டமிடல் எனும் இரு விடயங்களையும் உள்ளடக்கியது. எதிர்கால ”வெற்றி” நோக்கிய பயணம்கூட வஹியின் ஒளியிலேயே வரையறுக்கப்பட வேண்டும். வஹி எதனை வெற்றி எனக் கூறுகிறதோ அது நோக்கியே பயணம் வரையப்பட வேண்டும்.
“மனித வரலாறு” அதன் அனைத்து காலங்களையும் உலகின் அனைத்து இட பரிமாணங்களையும் வாழும் அனைத்து சாராரையும் கருத்திற் கொண்டதாக அமைவது அவசியம். நாகரீகங்களது எழுச்சி, வீழ்ச்சி பற்றிய ஆய்வில் ஹியுடைய வழிகாட்டலே முதன்மை இடம் பிடிக்கிறது. மனிதர்களையும் நாடுகளையும் நாகரீகங்களையும் வஹியின் அளவீடு கொண்டே அளக்க வேண்டும்.

3– இஜ்திஹாதுக்கான அடிப்படைகள்:

இஸ்லாமிய சிந்தனைத் தளத்தில் இஜ்திஹாத் எனும் பரப்பு முக்கிய இடம் வகிக்கிறது. இஜ்திஹாத் எனும் பரப்பில் மூன்று விடயங்களில் எமது கவனம் குவிகிறது: இஜ்திஹாதுக்கான வரைவிலக்கணம், இஜ்திஹாத் செய்பவர்கள், இஜ்திஹாதின் விளைவுகள்.

இஜ்திஹாதுக்கான வரைவிலக்கணம்:
இஜ்திஹாத் என்பது பொதுவாக, கிளையம்சம் ஒன்றில், மத்ஹப் ஒன்றுக்குள்ளால் இருந்து தீர்வை முன்வைப்பதை குறிப்பதாகவே உள்ளது. நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று, பிக்ஹ் என்பது சட்டப்பகுதியோடு மாத்திரம் சுருங்கிய ஒன்றல்ல, மாற்றமாக அறிவின் எல்லா பரப்புக்களையும் உள்ளடக்கிய ஆழ்ந்த அறிவு என்ற கருத்திலிருந்து இஜ்திஹாதை வரைவிலக்கணப்படுத்த முனைகிறோம். இஜ்திஹாத் என்பது “அனைத்து மானிட அறிவுப் பகுதிகளிலும் கடும் பிரயத்தனத்தை எடுத்தல்” எனலாம். இப்புரிதலில் இருந்து இன்றிருக்கும் அறிவுப் பகுதிகளை பிரதான நான்கு பகிதிகளாக வகுக்கலாம்:
*வணக்கங்கள்
*நிபுணத்துவ துறைகள் (பொருளாதாரம், அரசியல், சட்டம், மருத்துவம், கலை, இலக்கியம்...)
*இன்றைய உலக ஒழுங்கில் செல்வாக்கு பெற்றிருக்கும் வெளிப்பாடுகள் (நாஸ்திகம், மொழிகள், தொற்றுநோய், வங்கி, அடக்குமுறை, மீடியா, வறுமை, தேசிய அரச ஒழுங்கு...),

*நிறுவனங்கள்.

இவற்றுள் காலத்தால் மாறாத நிலைத்ததன்மை கொண்டவை, மாறுந்தன்மை கொண்டவை ஆகிய இரு பரிமாணங்களும் சரியாக வகுக்கப்பட வேண்டும். உதாரணமாக, வணக்கங்கள் என்ற பகுதியில் இஜ்திஹாதின் எல்லை மிகவும் குறுகியது. நிபுணத்துவ துறைகளில் வஹி முன்வைத்திருக்கும் அடிப்படை விழுமியங்கள், விதிகளினூடாக இஜ்திஹாத் நடைபெற வேண்டும்.

இஜ்திஹாத் செய்பவர்கள்:

இஜ்திஹாத் பற்றிய மேற்கூறிய புரிதலிலிருந்து இஜ்திஹாத் செய்பவர்கள் “அறிவு நீதியாக கடும் பிரயத்தனம் எடுக்கும் தனிநபர்கள், குழுக்கள், நிறுவனங்கள்” என அனைத்தும் இஜ்திஹாதின் பங்காளிகள் எனக் கூறலாம். அனைத்து துறைகளும் இஜ்திஹாதுக்கு உட்படுகின்றன. இஜ்திஹாத் செய்பவர் குறிப்பிட்ட துறையில் போதிய அறிவுப் பின்புலம் பெற்றவராகவும், சரியான ஆய்வு முறைமையை கடைபிடிப்பவராகவும், அனுபவம் ரீதியான அறிவு கொண்டவராகவும் இருக்க வேண்டும். வஹியை கற்று, வஹியின் ஒளியின் ஏழு தலையாய கருத்தாக்கங்களினூடாக (இலக்குகள், எண்ணக்கருக்கள்,குழுக்கள், பிரபஞ்ச விதிகள், பெறுமானங்கள், ஆதாரங்கள், ஏவல்கள்) தன் துறைசார்ந்த பகுதியில் கோட்பாட்டு சட்டகமொன்றை உருவாக்கிக் கொள்வதனூடாக இஜ்திஹாதை மேற்கொள்பவராக இருப்பார்.

இஜ்திஹாதின் விளைவுகள்:

இவ்வறையான இஜ்திஹாத் இருவகையான விளைவுகளை யாசிக்கிறது. வஹியின் ஒளியில் உருவாக்கப்படும் சட்டகத்தின் பின்புலத்தில் நலன்கள்,தீங்குகள் கண்டடையப்படுதல் முதல் விளைவு. அதனூடாக நலன்கள் வளர்த்தெடுக்கப்படுவதற்கும் தீங்குகள் குறைக்கப்படுவதற்குமான வேலைத்திட்டங்கள் உருவாக்கப்படும். அடுத்த விளைவு, குறிப்பிட்டதொரு செயலுக்கான நேரடியான ஹராம், ஹலால் தீர்ப்பை பெற்றுக் கொள்ளலாகும்.

ஆழ்ந்த புரிதலுக்கான வட்டம் எனவும் இதனை குறிப்பிடலாம். இவ்வட்டம் பின்வரும் ஐந்து கட்டங்களைக் கொண்டது:

1- ஆய்வின் நோக்கம்

2- அல்குர்ஆன், சுன்னாவை வாசித்தல்

3- கோட்பாட்டு சட்டகத்தை உருவாக்கல்

4- செல்வாக்கு செலுத்தும் கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் விமர்சன நோக்கில் அனுகுதல்

5- புதிய கோட்பாடுகளைத் தோற்றுவித்தல்





**CHART 2** FIVE STEPS OF THE MAQASID METHODOLOGY

நாம் பிரேரிக்கும் ஆய்வு முறைமையில் ஆய்வின் நோக்கம் முக்கியம் பெறுகிறது. சில போது ஆய்வின் தலைப்புகள் ஒன்றை ஒத்ததாக இன்னொன்று அமைகிறது. ஆனால், வித்தியாசப்பட்ட நோக்கங்கள் இரண்டுக்குமிடையிலான வேறுபாட்டை மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசமாக மாற்றிவிடுகிறது.

பொருளாதார அபிவிருத்தி எனும் தலைப்பை எடுத்துக் கொள்வோம். ஒரு ஆய்வு வறுமை மட்டத்தை குறைப்பதை இலக்காகக் கொள்கிறது. இதற்கு முற்றிலும் மாற்றமாக இன்னொரு ஆய்வு குறிப்பிட்டதொரு சமூகத்தின் வருமானத்தை அதிகரிப்பதை மாத்திரம் இலக்காகக் கொள்கிறது. இரண்டாவது தலைப்பு முறையற்ற, அநீதியான வருமான முறைமைகளையும் அங்கீகரிக்கும் போக்கை தலைப்பினுள் மறைமுகமாகக் கொள்கிறது.

ஆரம்பமாக, இலக்கு மிகக் கவனமாக வரையறுக்கப்பட வேண்டும். சட்டம் மிகைத்தல் என்பதை விட சட்டத்தின் நீதி இலக்காக்கப்பட வேண்டும். தேசத்தின் செல்வாக்கு என்பதைவிட தேசத்தின் நீதி முக்கியமானது. சந்தையின் சுதந்திரம் என்ற இலக்கை விட சந்தையின் நீதி முக்கியமானது. இவ்விலக்கை சரியாக வரையறுத்துக் கொள்வதில் பிழை விடும்போது அதன் விளைவு நீதி அநீதியாக மாற்றமைடைகிறது, கருணை அடக்குமுறையாக பரிணாமம் எடுக்கிறது. அடுத்த கட்டம், அல்குர்ஆன், சுன்னா மீதான தொடர்ந்தேர்ச்சையான வாசிப்பு. இங்கு, “பெயர்கள்” முக்கியம் பெறுகின்றன. அல்லாஹ் ஆதமுக்கு பெயர்களைக் கற்றுக் கொடுத்தான். பெயர்கள் அறிவையும், கோட்பாடுகளையும் உருவாக்குகின்றன. பெயர்களையும் அதனோடு தொடர்பான அடையாளக ்குறியீடுகளையும் கவனமாக உள்வாங்கிக் கொள்வதனூடாக கோட்பாடுகளை உருவாக்க முனைகிறோம். அதனோடு இணைந்ததாக அல்லாஹ்வின் அழகிய பெயர்களையும் அல்குர்ஆன் திருப்பித் திருப்பிக் கூறி எமது கவனத்தை ஈர்க்கிறது. குறிப்பாக, நாம் பின்வரும் ஏழு வகையான கருத்தாக்கங்களை அல்குர்ஆன், சுன்னாவிலிருந்து எடுக்கிறோம்

இலக்குகள், எண்ணக்கருக்கள், குழுக்கள், இறைவிதிகள், பெறுமானங்கள், ஆதாரங்கள், ஏவல்கள் (வஹி குறிப்புடும் இலக்குகளை நோக்கி நகர்தல், வஹியின் ஒளியில் எண்ணக்கருக்களை சரிப்படுத்தல், குழுக்களை வகைப்படுத்தல், இறைவிதிகளை கருத்திற் கொள்ளல், பெறுமானங்களை எடுத்துக் கொள்ளல், ஆதாரங்கள் அடிப்படையில் மேற்கொள்ளல், ஏவல், விலக்கல்களை எடுத்து நடத்தல்)





**CHART 3** THE SEVEN ELEMENTS OF THE MAQASID FRAMEWORK





CHART 6 HIGHLIGHTS FROM THE CYCLES OF REFLECTION UPON THE ATTRIBUTES OF ALLAH ﷻ IN THE QURAN AND SUNNAH, WHICH LEAD TO THE INITIAL CLASSIFICATION OF THE SEVEN ELEMENTS FRAMEWORK

குடும்பம் சார்ந்த ஒட்டுமொத்த பார்வை ஒன்றை அல்குர்ஆன்உடைய சொற்களினூடாக உருவாக்குவதற்கான முயற்சியை கீழேதருகிறோம்





CHART 4 AN EXAMPLE OF THE OUTCOME OF THE CYCLES OF REFLECTION UPON THE QURAN AND SUNNAH WHILE RESEARCHING FAMILY LAW, PROJECTED ONTO A MIND MAP THAT REPRESENTS THE 7-ELEMENTS FRAMEWORK (TO BE EXPLAINED IN CHAPTER 5)

மருத்துவம் சார்ந்த ஒட்டுமொத்த பார்வை ஒன்றை அல்குர்ஆன்உடைய சொற்களினூடாக உருவாக்குவதற்கான முயற்சியையும் கீழே தருகிறோம்:





**CHART 11** A PRELIMINARY SURVEY THROUGH THE CYCLES OF REFLECTION UPON THE QURAN AND SUNNAH WHILE RESEARCHING THE BASIC ELEMENTS LINKED TO MEDICINE, PROJECTED ONTO A MIND MAP THAT REPRESENTS THE SEVEN ELEMENT FRAMEWORK

வஹி மீது தொடர்ந்தேர்ச்சையான அவதானம், வாசிப்பு மூலம் நாம் பிரேரிக்கும் ஏழு அடிப்படைகளையும் உள்வாங்கிக்கொண்டு அடுத்தகட்டம் நோக்கி நகரவேண்டும். எமது பாரம்பரிய இஸ்லாமியசிந்தனை, நவீன இஸ்லாமிய சிந்தனையுடனான விமர்சனரீதியான அணுகல் அடுத்து முக்கியமானது. வஹி மீதான ஆழ்ந்த வாசிப்பினூடாக கோட்பாடுகளை உருவாக்க முனைகிறோம். வஹியுடைய தனித் தனி வசனங்களை ஒன்றோடொன்று இணைத்து, தொடர்புகளை ஏற்படுத்தி கோட்பாடுகள் உருவாக்கப்பட வேண்டும் என நம்புகிறோம்.



## பகுதி 05: ஏழு கருத்தாக்கங்களும் அவற்றை காணும் முறைமைகளும்

நாம் பிரேரிக்கும் ஏழு கருத்தாக்கங்களையும் காணும் முறைமை எமது உரையாடலில் முக்கியம் பெறுகிறது. இங்கு நாம் ஏழு கருத்தாக்கங்களையும் தனித்தனியாக விளக்கமுற்படவில்லை. மாற்றமாக சில உதாரணங்களை மாத்திரம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அத்தோடு அரபுமொழிபற்றிய ஆழ்ந்த புரிதல் இப்பகுதியில் எமக்கு மிகவும் உதவுகிறது என்பதையும் வலியுறுத்துகிறோம். அல்குர்ஆன் சில எண்ணக்கருக்களை (Concepts) விரிந்த விளக்கங்கள் இன்றி ஒரு வார்த்தையில் குறிப்பிட்டுச்செல்லும். உதாரணமாக "ஷூரா" என்ற சொல். ஷூரா பற்றி நேரடியாக பேசும்போது அல்குர்ஆன் அந்த சொல்லை மாத்திரம் குறிப்பிட்டுச்செல்கிறது.

ஆனால், அல்குர்ஆனில் வேறு பல இடங்களில் ஷூராவின் பிரயோகம் வித்தியாசமான வார்த்தைகளில் விளக்கப்பட்டுள்ளது. ஷூரா பற்றி புரிந்து கொள்ளும்போது அதனோடு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபடும் அனைத்து வசனங்களையும் இணைத்தே புரியவேண்டும். இன்னும் சில எண்ணக்கருக்களை அல்குர்ஆன் ஓரளவு விரிவாக விளக்கியுள்ளது. உதாரணமாக "பிர்", "நிபாக்" போன்ற சொற்களைக் குறிப்பிடலாம். கருத்துக்களை ஆழமாக புரிந்துகொள்ள வித்தியாசமான அல்குர்ஆன் கிராஅத்துக்களும் உதவுகின்றன.

இன்னும் சில எண்ணக்கருக்களை விளங்க அதனோடு தொடர்புபட்டு வரும் சொற்களையும் ஆழ்ந்த அர்த்தத்தத்துடன் புரிந்துகொள்வது அவசியமாகிறது. அது எமது உலகப்பார்வையை மென்மேலும் விரிவுபடுத்துகிறது.

உதாரணமாக அல்குர்ஆன் குறிப்பிடும் "ஹைர்"(خير) என்ற சொல்லை "ஹசன்" (حسن) என்ற சொல்லோடு இணைத்துப்பார்த்தலைக் கூறலாம். "கத.:." (خطأ) என்ற சொல்லை "தன்ப்" (ذنب)என்ற சொல்லோடு இணைத்துப் பார்க்கின்றபோது கருத்து விரிவுபடுகிறது. சில போது எண்ணக்கருக்களை ஒன்றோடு இன்னொன்றை இணைத்துப்பார்க்க வேண்டிவரலாம். உதாரணமாக "அர்லுல்லாஹ்", "ஹுதூதுல்லாஹ", "ஆயாதுல்லாஹ்" போன்ற எண்ணக்கருக்களை ஒன்றோடொன்றை இணைத்துப் பார்க்கின்றபோதே எண்ணக்கருக்கள் தெளிவாகின்றன.

குழுக்களை புரிந்துகொள்ளும்போது வரலாற்றோட்டம், நடைமுறை, அதிலிருக்கும் சிக்கல்கள் போன்ற அனைத்தையும் உள்வாங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. உதாரணமாக "ஆட்சியாளர்கள்", "உலமாக்கள்" இருசாராருக்கு மிடையிலான தொடர்பு. சில போது ஷூராவை நடைமுறைப்படுத்தும் போது ஷூரா அடிப்படையில் எடுக்கும்கருத்தை ஆட்சியாளன் கட்டாயமாக எடுக்கவேண்டுமா? இல்லையா? என்ற உரையாடலில் இன்றைய ஆட்சி ஒழுங்கு, சர்வதிகாரம் போன்ற தன்மைகள் உள்வாங்கிய நிலையிலேயே முடிவுகள் எட்டப்படவேண்டும். எடுக்கும் முடிவு சர்வதிகாரத்தை தோற்றுவிக்கவோ, இருக்கும் சர்வதிகாரத்தை பலப்படுத்தவோ வழியமைத்துவிடக்கூடாது.

அல்குர்ஆன் குறிப்பிடும் சில கதாபாத்திரங்களது பண்புகள் எல்லா காலத்துக்கும் பொருந்திச்செல்கின்றன. உதாரணமாக பிர்அவ்னுடைய சர்வதிகார ஆட்சியும் அவனது அகங்காரமும் ஆட்சியாளர்கள் எனும் குழுவுடன் ஒப்பிட்டுப்பார்க்கக்கூடியவை. சப.: அரசி ஆட்சியாளர்களுக்கான இன்னொரு உதாரணம். குழுக்கள் மனிதர்களோடு மாத்திரம் சுருங்கிவிடுவதில்லை. மாற்றமாக கால்நடைகள், விலங்குகள், மீன் போன்ற நீர்வாழும் உயிரினங்கள் என பலவகைப்படுகின்றன. ஜின்கள் போன்ற மனிதகற்புலனாகாத உயிரினங்களையும் ஒரு குழுவாக அல்குர்ஆன் குறிப்பிட்டுக்காட்டுகிறது. அல்குர்ஆன் குறிப்பிடும் குழுக்கள், அக்குழுக்களது பண்புகள் மிகக்கவனமான வாசிப்பை வேண்டிநிற்கின்றன.

பேராசிரியர் ஜாசிர் அவ்தா ஓரளவு விரிவாக விளக்கியிருக்கும் பகுதியின் சில புள்ளிகளையே நாம் இங்கு தொட்டுக் காட்டியிருக்கிறோம் என்பதைக்கருத்திற் கொள்க.

# பகுதி 06: இஸ்லாமிய கற்கைகளுக்காக பிரேரிக்கப்படும் புதிய ஒழுங்கு

நாம் மேலே விளக்கிய மகாசித் ஆய்வு முறைமை நடைமுறையில் எவ்வாறு சாத்தியமாகும் என்பதையே இப்பகுதி விளக்க முனைகிறது. அவ்வாய்வு முறைமை மூன்று பகுதிகளில் தாக்கம் செலுத்தக் கூடியதாக இருக்க வேண்டும் எனக்கருதுகிறோம்: ஆய்வுப்பரப்பு, கறபீத்தல் மற்றும் பயிற்றுவிப்பு, நிறுவனவேலைத்திட்டம். ஆய்வுரீதியான வேலைத்திட்டம் சிந்தனைகளையும், புத்தகங்களையும், அறிவு உற்பத்திக்கான வழிகளையும் தோற்றுவிக்கின்றன. அவை அனைத்துதுறைகளையும் உள்ளடக்கியவகையிலான கற்பித்தலுக்கும் பயிற்றுவித்தலுக்கும் உதவுகின்றன. அறிவு, உள்ளம், நடத்தை ஆகிய மூன்றுபகுதிகளையும் உள்ளடக்கியவகையிலான பயிற்றுவிப்பு அவசியமாகிறது. இவ்வகையான கற்பித்தலால் உருவாகும் ஆளுமைகள் நிறுவனரீதியாக இயங்குவதற்கான நிறுவனகட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும்.




CHART 13 THE THREE AREAS OF REALISATION OF THE MAQASID METHODOLOGY

இன்று முஸ்லிம்களிடம் இருக்கும் கற்றல், கற்பித்தல் முறைமையை விட்டும் வித்தியாசமான ஒழுங்கொன்றையே நாம் பிரேரிக்கிறோம்.

“இஸ்லாமியகற்கைகள்” புதியதொரு ஒழுங்கைப்பெறவேண்டும் என உறுதியாகநம்புகிறோம்.

பொதுவாக முஸ்லிம்கள் பாரம்பரியகலைகளில் அல்லது இஸ்லாமிய மூலாதாரங்களை எவ்விதத்திலும் தொடர்புபடுத்தாத நிலையில் வேறுதுறைகளில் கற்பவர்களாக உள்ளனர். குறிப்பாக மேற்கத்தயநாடுகளில் கற்பவர்களும் மேற்கத்தய நாடுகள் இயக்கும் கிழக்குலக பல்கலைக்கழகங்களில் கற்பவர்களும் மதச்சார்பின்மை உலகப்பார்வையினூடாகவே– பயிற்றுவிக்கப்படுகின்றனர். தப்சீர், ஹதீஸ், பிக்ஹ், தசவ்வுப், இஸ்லாமிய வரலாறு என பாரம்பரியகலைகள் விரிவடைகின்றன. மறுபுறம், அரசியல், சமூகவியல், தத்துவம், சட்டம், கலை, இலக்கியம், மொழி என அடுத்தபகுதி விரிவடைகிறது.

நாம் ஆரம்பத்தில் விளக்கியவகையில், முஸ்லிம் சமூகம் அடையவேண்டிய இலக்குகள், மனிதசமூகம் அடையவேண்டிய இலக்குகள் என இரு இலக்குகளையும் நோக்கி நகர்வதற்கு இவ்விருவகைகற்பித்தல் முறைமைகளும் போதுமானதாக இல்லை. இலக்குகளை அடையும்வகையில் இஸ்லாமியகற்கைகள் மீளொழுங்கு செய்யப்படவேண்டும் எனக்கருதுகிறோம். கற்கைகள் பின்வரும் நான்கு பிரதான பகுதிகளாக பிரிகின்றன:

1- Usuli Studies

2- Disciplinary Studies

3- Phenomena Studies

4- Strategic Studies




CHART 8 PROPOSED CLASSIFICATION FOR CONTEMPORARY ISLAMIC STUDIES

நேரடியாக வஹியுடன் தொடர்புபடும் கலைகளை இக்கற்கை உள்ளடக்குகிறது. தப்சீர், ஹதீஸ், இல்முல்கலாம், பிக்ஹ் போன்ற பகுதிகளைக் கொண்டது. இங்கு ஒவ்வொரு கலையையும் வரலாற்றோடு இணைத்துப்பார்க்கப்படுவதை விட வஹியுடன் அதிகம் இணைத்துப்பார்க்கப்படுவதையே வலியுறுத்துகிறோம். ஒவ்வொரு கலைகளிலும் பிரயோகிக்கப்பட்டு வந்திருக்கும் ஆய்வு முறைமை விமர்சனரீதியாக அணுகப்பட்டு நவீனகால சவால்களை எதிர்கொள்ளும் விதமான ஆய்வுமுறைமை ஒன்றை தோற்றுவிப்பதே இங்கு முக்கியம் பெறுகிறது. உதாரணமாக, நவீனகால சவால்களை உரையாடும் முழுமையான தொரு தப்சீர் வேலைத்திட்டம் உருவாக்கப்பட வேண்டியுள்ளது. ஹதீஸ்களைப் பொறுத்தவரை, அதன் பாரம்பரிய தலைப்பொழுங்கு நவீனகால தேவைகளுக்கு ஏற்ப மீளொழுங்கு செய்யப்படவேண்டும் எனலாம். மதன், சனத் பற்றிய ஆழ்ந்த ஆய்வு தேவைப்படுகிறது. குறிப்பாக பெண், அரசியல், இஸ்ராஈலிய்யாத் ஆகிய மூன்று தலைப்புக்களுடனும் தொடர்புபடும் ஹதீஸ்கள் அல்குர்ஆனின் ஒளியில் நின்று மீள்வாசிக்கப்படவேண்டும். இல்முல்கலாம் துறையில் ஆரம்பகால முரண்பாடுகளைத்தாண்டி இன்று சமூகம் எதிர்கொள்ளும் மதச்சார்பின்மை, நாஸ்திகம், தாராண்மைவாதம் போன்ற கருத்தாக்கங்கள் ஆய்வுக்குட்படுத்தப்படவேண்டும். பாரம்பரியபிரிப்பு முறைகளான அஷ்அரி, மாத்ருதி, சலபி, ஷீஆ, சூபி போன்றவகைப்பாடுகளை கடந்து புதிய ஒழுங்குகள் வகுக்கப்படவேண்டிய தேவை உள்ளது. பிக்ஹ்துறை அடிப்படைமூலாதாரங்களான அல்குர்ஆன், சுன்னாவையும இஜ்திஹாதுக்கான வாயில்களான இஜ்மா, கியாஸ் போன்ற பகுதிகளையும் சரியாக வகைப்படுத்திக் கொள்ளவேண்டியுள்ளது.

Disciplinary Studies:

நவீனகால துறைகளை விமர்சனரீதியாக அணுகவேண்டியுள்ளது. அத்துறையை முழுமையாக மறுப்பதற்கோ, நியாயம் கண்டு முழுமையாக ஏற்றுக் கொள்வதறகோ அல்ல. வஹியின் ஒளியில் அவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக. சிலபோது பகுதி ரீதியான ஒழுங்குபடுத்தல் தேவைப்படும். இன்னும் சிலபோது முழுமையான ஒழுங்குபடுத்தல் நோக்கி நகரவேண்டியிருக்கும். மேற்கில் தோற்றம் பெற்ற மதச்சார்பின்மை பின்னணியிலேயே இவ்வகைகலைகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. வஹியின் ஒளியில் நாம் இத்துறைகளை அணுகும் போது முரண்படும் இடங்கள் இருப்பது இயல்பானது. நிலம், மதம், மனிதன், சொத்துரிமை, செல்வம், ஆட்சி, அறிவு, விலங்கு, புத்தி, ஆரோக்கியம், குடும்பம், அரசு, பலம், நீதி, சத்தியம், அழகு, நலன், வெற்றி போன்ற எண்ணக்கருக்களை வரையறுப்பதில்கூட இஸ்லாமிய கண்ணோட்டம் வித்தியாசப்பட்டமைகிறது. கலைகளை கட்டியெழுப்புவதில் இது நிச்சயம் தாக்கம செலுத்தக்கூடியதாக இருக்கும்.

அல்குர்ஆனின் ஒளியில் குழுக்களை வரையறுக்கும்போதும் வித்தியாசங்கள் தோன்றுகின்றன. சீர்செய்பவர் (مصلح), சீரழிப்பவர் (مفسد), அறிஞர்கள் (علماء), மடையர்கள் (سفهاء), உண்மையானவர் (صادق), இருமுகம்கொண்டவன் (منافق), தேவையுடையவர் (ذو الحاجة), அதிகாரமிக்கபொறுப்பாளர் (أولو الأمر), பணக்காரர்கள் (أغنياء), ஏழைகள் (فقراء) போன்ற குழுக்கள் இன்றைய குழுபிரிப்புமுறைக்கு முற்றிலும் வேறுபட்டமைகிறது.ஒன்றுக்கு மேற்பட்ட துறையில் பாண்டித்யம் பெறல் இன்று அதிகம் வலியுறுத்தப்பட வேண்டியுள்ளது.

பொருளாதாரம், அரசியல், கலை, இலக்கியம், உளவியல் என ஒன்று இன்னொன்றோடு இருக்கமான பிணைப்பைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு துறைகளிலும் உள்ள கோட்பாடுகள், சிந்தனையாளர்கள் பற்றிய ஆழ்ந்த புரிதலின் பின்னணியிலேயே வஹியுடனான ஒப்பீட்டாய்வு மேற்கொள்ளப்படவேண்டும். ஒப்பீட்டய்வு என்பது ஏனைய கோட்பாடுகளையும் சிந்தனைகளையும் முழுமையாக மறுப்பதல்ல. எத்தனையோ நல்ல பகுதிகள் இருக்கின்றன. அவற்றை உள்வாங்கிக்கொள்வது அவசியம்.




CHART 10 WEB OF CONTEMPORARY DISCIPLINES

Phenomena Studies:

இத்துறை ஊடாக சமூகங்கள்,மனிதன், வறுமை, சூழல்சார்ந்தபிரச்சினைகள், சந்தை, தேசம், தொழிநுட்பம், மொழி, சமூகநீதி, நிலம் சார்ந்த ஆய்வுகள்,நோய், தொற்று சார்ந்த ஆய்வுகள், அனர்த்தங்கள், நீதியான ஆட்சி, அடக்குமுறைஆட்சி, கைத்தொழில்கள், நாகரீகம், கலாச்சாரம் பற்றிய ஆய்வுகள், இனவாதம் போன்ற இன்னும் பல பகுதிகள் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. அனைத்துவகை சார்பியங்களையும் தாண்டிய சுயாதீனமான ஆய்வாக இருப்பது அவசியம்.




CHART 12 WEB OF CONTEMPORARY (NEGATIVE) PHENOMENA

நாம் ஆரம்பத்தில் விளக்கிக்கூறிய வகையில், முஸ்லிம் சமூகம் அடைந்துகொள்ளவேண்டிய இலக்குகள், மனிதசமூகம் அடையவேண்டிய இலக்குகளை நோக்கமாகக்கொண்ட நகர்வுக்கு இவ்வகையான ஆய்வுகள் ˙பெரிதும் முக்கியம் பெறுகின்றன. இன்று பேசுபொருளாகியிருக்கும் நாஸ்திகம், வறுமை, தொற்றுநோய், மருந்துபதுக்கல், இனசுத்திகரிப்பு, சர்வதேசபோராட்டங்கள், இஸ்லாமோபோபியா, அகதிகள்,

உளவியல்நோய்கள் புறநடையான ஆண்–பெண்உறவுகள், போதைப்பொருள்பாவனை, பெண்களுக்கெதிரான அநியாயங்கள் என விரிந்துசெல்லும் இன்றைய தோற்றப்பாடுகளில் பத்வா நிறுவனங்கள் ஹராம், ஹலால் என்று கூறுவதுடன் நிறுத்திக்கொள்வது போதுமானதாக இல்லை. தோற்றப்பாடுகளை முழுமையாக உள்வாங்கிய ஆய்வுகளும் பத்வாக்களும் தீர்வுக்கான வேலைத்திட்டங்களும் அவசியப்படுகின்றன.

Strategic Studies

நடைமுறைப்படுத்தலுக்கான நிறுவனஒழுங்குபற்றிய ஆய்வை இப்பகுதிகுறிக்கிறது. கற்பித்தல் நிறுவனங்கள், அரசநிறுவனங்கள், சமூகநிறுவனங்கள், பொருளாதாரம்சார் நிறுவனங்கள் என்று இப்பகுதிவிரிவடைகிறது. இஸ்லாமிய வரலாற்றில் இருந்த வக்ப், மஸ்ஜித் போன்ற நிறுவனங்கள் ஆற்றிய பங்களிப்பை இன்று எவ்வாறு உயிர்ப்பிக்கலாம் போன்ற ஆய்வுகள் அவசியமானவை. இருபகுதிகள் இங்கு தொடர்புபடுகின்றன.ஒன்று ஆய்வுகள் எனும் பகுதி. அடுத்தது நடைமுறைப்படுத்தல் எனும் பகுதி.இன்றிருக்கும் உலக ஒழுங்கில் நிறுவனங்கள எவ்வைகையில் கட்டியெழுப்பப்படவேண்டும் என்ற ஆழ்ந்தபுரிதல் அவசியப்படுகிறது.